# திண்ணை பயிற்சிப்பட்டறை - தேனி

# TNPSC GROUP I, II, IIA, IV - 2023

19th Batch

Test - 25

Mobile: 93614 82208, 99409 70325 Email id: thinnaimail@gmail.com

## திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!

இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!

உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!

நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!

இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!

இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!

தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!

கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!

சாதி, மதம் பேதம் ஒழிப்போம்!

பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!

லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!

லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!

அறத்தின் வழிநின்று மனிதம் போற்று!!

1) "உயிர் இல்லாத பொருள்களை உயிர் உள்ளன போலவும், உணர்வு இல்லாத பொருள்களை உணர்வு உடையன போலவும் கற்பனை செய்வதை" தற்போது எவ்வாறு கூறுகின்றன?
   A) இலக்கணை B) இணை ஒப்பு C) முரண்படு மெய்ம்மை D) எதிரிணை இசைவு
   E) விடை தெரியவில்லை
2) பாவலரேறின் எந்த படைப்பு தமிழுக்கு கருவூலமாய் அமைந்துள்ளது?
   A) எண்சுவை என்பது B) திருக்குறள் மெய்ப்பொருளுரை C) திருக்குறள் மரபுரை
   D) திருவள்ளுவ மாலை E) விடை தெரியவில்லை
3) "குறிஞ்சி மலர்" நூலின் ஆசிரியர்?
   A) இரா.பி.சேதுபிள்ளை B) கி.ஆ.பெ. விஸ்வநாம் C) நா.பார்த்தசாரதி D) திரு.வி.கல்யாணசுந்தரம்
   E) விடை தெரியவில்லை
4) ஐம்பெருங்காப்பியங்கள் எதற்கு அணிகலன்களாய் விளங்குகின்றன என்று சந்தக்கவிமணி கூறுகிறார்?
   A) தமிழ் B) மொழி C) இயல் D) நாடகம் E) விடை தெரியவில்லை
5) "வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்" இந்த வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?
   A) நரி விருத்தம் B) கம்பராமாயணம் C) சிலப்பதிகாரம் D) தமிழின்பம்
   E) விடை தெரியவில்லை
6) சந்தக்கவிமணியின் இயற்பெயர் யாது?
   A) தேசிக விநாயகம்பிள்ளை B) துரை மாணிக்கம் C) சண்முகசுந்தரம் D) இராதாகிருஷ்ணன்
   E) விடை தெரியவில்லை
7) "களம்புகத் துடித்த உனக்கு வெற்றிச்சாறு கிடைத்து விட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகை தான் அதற்குச் சான்று" இதைக் கூறியவர்?
   A) காந்தி B) அண்ணா C) வள்ளலார் D) பெரியார் E) விடை தெரியவில்லை
8) "களிஇயல் யானை கரிகால் வளவ" இப்பாடல் எம்மன்னனைப் புகழ்ந்து பாடுகிறது?
   A) சங்ககாலப் பெண்கள் B) வெண்ணிக் குயத்தியர் C) கரிகால் பெருவளத்தான்
   D) சேரல் இரும்பொறை E) விடை தெரியவில்லை
9) "பல் பழுப் பலவின் பயங்கெழு கொல்லி" இவற்றில் கூறப்பட்டுள்ள மலை எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
   A) திண்டுக்கல் B) மதுரை C) கரூர் D) நாமக்கல் E) விடை தெரியவில்லை
10) உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக்கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம்
   A) உரைநடை கவிதை B) வசன கவிதை C) ஹைக்கூ கவிதை D) அனைத்தும்
   E) விடை தெரியவில்லை
11) உலக காற்று நாள் என்று கொண்டாடப்படுகிறது?
   A) ஜுன் 2 B) ஜுன் 25 C) ஜுன் 5 D) ஜுன் 15 E) விடை தெரியவில்லை
12) "வளிமிகின் வலி இல்லை" - இவ்வரியை இயற்றியவர்?
   A) மதுரை இளநாகனார் B) மதுரை சீத்தலைச்சாத்தனார் C) ஐயூர் முடவனார் D) இளங்கோ
   E) விடை தெரியவில்லை
13) காலம் கரந்த பெயரெச்சம் என்பது
   A) முற்றெச்சம் B) குறிப்பு பெயரெச்சம் C) தெரிநிலைப் பெயரெச்சம் D) வினைத்தொகை
   E) விடை தெரியவில்லை
14) "உனக்குப் பாட்டுகள் பாடுகின்றோம், உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகின்றோம், உன்னை வழிபடுகின்றோம் இவ்வரியை எழுதியவர்
   A) பாரதிதாசன் B) கண்ணதாசன் C) பாரதியார் D) தாராபாரதி E) விடை தெரியவில்லை
15) "கப்பிய பசியி னோடு கடும்பசி ஆகும் தானே" இவ்வரி இடம்பெற்ற நூல்?
   A) சீவக சிந்தாமணி B) விவேக சிந்தாமணி C) காசிக்காண்டம் D) நறுந்தொகை
   E) விடை தெரியவில்லை
16) "அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" இவ்வரி இடம்பெற்றுள்ள நூல்?
   A) நற்றிணை B) அகநானூறு C) குறுந்தொகை D) கலித்தொகை E) விடை தெரியவில்லை

17) "காலின் ஏழடிப் பின் சென்று" இவ்வரி இடம்பெற்றுள்ள நூல்?
A) பெரும்பாணாற்றுப்படை B) மலைபடுகடாம் C) பொருநராற்றுப்படை D) புறநானூறு
E) விடை தெரியவில்லை
18) பொருந்து மற்று அவன் தன்அருகுற இருத்தல் போமெனில் பின் செல்வதால் - இப்பாடலின் ஆசிரியர் யார்?
A) அதிவீரராம பாண்டியர் B) ஒட்டக்கூத்தர் C) வில்லிபுத்தூரார் D) கம்பர்
E) விடை தெரியவில்லை
19) "விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல" என்ற பரிபாடல் வரியில் 'ஊழ்' என்ற சொல்லின் பொருள்?
A) அழிவு B) யுகம் C) வருந்தும் D) முறை E) விடை தெரியவில்லை
20) இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் .................. எனப்படும்.
A) இலக்கணப் போலி B) வழாநிலை C) வழு D) வழுவமைதி E) விடை தெரியவில்லை
21) "உலாவும் மனச்சிறு புள்ளினை எங்ஙனும் ஓட்டி மகிழ்ந்திடுவோம்" இவ்வரியைப் பாடியவர்?
A) கவிக்கோ B) வாணிதாசன் C) பாரதிதாசன் D) பாரதியார் E) விடை தெரியவில்லை
22) "மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ ஆளா உனதருளே ...." இவ்வரியில் 'நீ' என்ற சொல்லால் குறிப்பிடப்படும் இறைவன்?
A) வெங்கடாசல பெருமாள் B) உய்யவந்த பெருமாள் C) ஸ்ரீரங்கநாதப் பெருமாள்
D) அத்திவரதப் பெருமாள் E) விடை தெரியவில்லை
23) பெருமாள் திருமொழி நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் எத்தனையாவது திருமுறையாக உள்ளது?
A) 5 B) 8 C) 3 D) 4 E) விடை தெரியவில்லை
24) 'என் அம்மை வந்தாள்' என்று மாட்டைப் பார்த்து கூறுவது .............. வழுவமைதி ஆகும்.
A) மரபு B) திணை C) பால் D) இடம் E) விடை தெரியவில்லை
25) வினாவிற்கு விடையாக இனிமேல் நடக்கவிருப்பதைக் கூறுவது
A) மறைவிடை B) உற்றது உரைத்தல் விடை C) உறுவது கூறல் விடை D) நேர்விடை
E) விடை தெரியவில்லை
26) கூற்று 1 : பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் நையாண்டி மேளமும் நாகசுரமும் இசைக்கப்படுகிறது.
கூற்று 2 : இது ராஜஸ்தானில் குதிரைக்களி என்றும் கேரளத்தில் கச்சிக்கொடி என்றும் அழைக்கப்படுகிறது.
A) 1 சரி, 2 தவறு B) இரண்டும் தவறு C) 1 தவறு, 2 சரி D) இரண்டும் சரி
E) விடை தெரியவில்லை
27) கலைஞாயிறு என்று அழைக்கப்படுபவர்?
A) தேவநேயப் பாவாணர் B) ந.முத்துச்சாமி C) பெருஞ்சித்திரனார் D) வாணிதாசன்
E) விடை தெரியவில்லை
28) 'நட்சத்திரங்களின் நடுவில்' என்ற கவிதைத் தொகுதியைப் படைத்தவர்?
A) ந.முத்துசாமி B) அறிவுமதி C) இரா.மீனாட்சி D) உமா மகேஸ்வரி
E) விடை தெரியவில்லை
29) "தெண்டிரை எழினி காட்ட தேம்பிழி மகர யாழின்" என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்?
A) சிலப்பதிகாரம் B) கம்பராமாயணம் C) சீவக சிந்தாமணி D) முல்லைப்பாட்டு
E) விடை தெரியவில்லை
30) புரவி நாட்டியம் யாருடைய காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது?
A) நாயக்கர் காலம் B) சோழர் காலம் C) பாண்டியர் காலம் D) மராத்தியர் காலம்
E) விடை தெரியவில்லை
31) கூற்று 1 : பிள்ளைத்தமிழ் பத்து பருவங்கள் அமைத்து, பருவத்திற்கு பத்துபாடல் என நூறு பாடல்களால் ஆனது.
கூற்று 2 : இது இறைவன் மற்றும் தலைவரை மட்டுமே பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெறும்.
A) 1 சரி, 2 தவறு B) இரண்டும் சரி C) 1 தவறு, 2 சரி D) இரண்டும் தவறு
E) விடை தெரியவில்லை
32) "Myth" என்பதன் கலைச்சொல்
A) தொன்மம் B) அகழாய்வு C) அழகியல் D) சிற்பம் E) விடை தெரியவில்லை
33) "வண்டொடு புக்க மணவாய் தென்றல்" என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்?

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை C) புறநானூறு D) நற்றிணை E) விடை தெரியவில்லை

34) பொருத்துக.

a. மூதூர் - 1. பண்புத்தொகை
b. உறுதுயர் - 2. வினைத்தொகை
c. கைதொழுது - 3. மூன்றாம் வேற்றுமைத்தொகை
d. தடக்கை - 4. உரிச்சொற்தொடர்

A) 1 2 3 4 B) 3 2 4 1 C) 4 3 2 1 D) 3 4 2 1 E) விடை தெரியவில்லை

35) "மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து" என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்?

A) முக்கூடற்பள்ளு B) புறநானூறு C) நற்றிணை D) குறுந்தொகை E) விடை தெரியவில்லை

36) "சாகும் போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் - என்றன்
சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" எனப் பாடியவர்?

A) க. சச்சிதானந்தன் B) பெருஞ்சித்திரனார் C) துரை மாணிக்கம் D) தேவநேயப் பாவாணர்
E) விடை தெரியவில்லை

37) "இந்த உலகில் பயம் என்ற ஒன்றிற்கு தவிர வேறு எதற்கு நாம் பயப்பட வேண்டும்?" இது எதற்கான எடுத்துக்காட்டு ஆகும்?

A) உவமை B) உவமேயம் C) முரண்படு மெய்ம்மை D) உருவகம் E) விடை தெரியவில்லை

38) கூற்றுகளை ஆராய்க.

கூற்று 1 : திரு.வி.க. போல் இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் இளங்குமரனார்.
கூற்று 2 : திருக்குறள் தமிழ்மரபு என்ற நூலை எழுதியவர் இளங்குமரனார்.

A) 1, 2 சரி B) 1 சரி, 2 தவறு C) 1 தவறு, 2 சரி D) 1, 2 தவறு
E) விடை தெரியவில்லை

39) பொருத்துக.

a. கொண்டல் - 1. மேற்கு
b. கோடை - 2. தெற்கு
c. வாடை - 3. கிழக்கு
d. தென்றல் - 4. வடக்கு

A) 1 2 3 4 B) 3 1 4 2 C) 4 3 2 1 D) 3 4 1 2 E) விடை தெரியவில்லை

40) கூற்றுகளை ஆராய்க.

கூற்று 1 : முல்லை நிலத்தில் காணப்படும் நீர் சுனைநீர்.
கூற்று 2 : முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுது கார்காலம்.

A) 1, 2 சரி B) 1, 2 தவறு C) 1 சரி, 2 தவறு D) 1 தவறு, 2 சரி E) விடை தெரியவில்லை

41) "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரி சங்கம் வைத்தும்" என்று கூறும் செப்பேடு எது?

A) மாமண்டூர் B) சின்னமனூர் C) கரந்தை D) இலங்கை E) விடை தெரியவில்லை

42) "அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார்" என்று கூறும் நூல் எது?

A) இலக்கண விளக்கம் B) நன்னூல் C) தொன்னூல் விளக்கம் D) தொல்காப்பியம்
E) விடை தெரியவில்லை

43) "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனித்த கனியே" என்ற பாடலின் ஆசிரியர் யார்?

A) பாரதிதாசன் B) பாரதியார் C) கண்ணதாசன் D) வள்ளலார் E) விடை தெரியவில்லை

44) "காசினியில் இன்றுவரை அறிவின் மன்னர்
கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணி
பேசி மகிழ்நிலை வேண்டும்" என்று கூறியவர்?

A) குலோத்துங்கன் B) கம்பர் C) நக்கீரர் D) ஒட்டக்கூத்தர் E) விடை தெரியவில்லை

45) "வெய்யோன் ஒளிதன் மேனியில் விரி சோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்" என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்?

A) சிலப்பதிகாரம் B) கம்பராமாயணம் C) மணிமேகலை D) சீவகசிந்தாமணி
E) விடை தெரியவில்லை

46) செய்குத்தம்பி பாவலர் நினைவைப் போற்றும் வகையில் மணிமண்டபமும் பள்ளியும் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?
A) இடலாக்குடி B) சென்னை C) வைகுந்தம் D) மேட்டுப்பாளையம் E) விடை தெரியவில்லை

47) “அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை” என்ற நூலின் ஆசிரியர்?
A) கா.ப.செய்குத்தம்பி பாவலர் B) மாணிக்கவாசகர் C) தாயுமானவர் D) இராமலிங்க அடிகள்
E) விடை தெரியவில்லை

48) ‘விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்’ - என்ற குறளில் பயின்றுவரும் பொருள்கோள் எது?
A) கொண்டு கூட்டுப் பொருள்கோள் B) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் C) தாப்பிசைப் பொருள்கோள்
D) அடிமறிமாற்றுப் பொருள்கோள் E) விடை தெரியவில்லை

49) பாய்ச்சல் என்னும் சிறுகதை எச்சிறுகதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பபட்டது?
A) தக்கையின் மீது நான்கு கண்கள் B) சாயாவனம் C) அவனும் அவளும்
D) விசாரணைக் கமிஷன் E) விடை தெரியவில்லை

50) பொருத்துக.
திணை பெரும்பொழுது
a. குறிஞ்சி - 1. குளிர்காலம், முன்பனிக்காலம்
b. முல்லை - 2. கார்காலம்
c. மருதம் - 3. ஆறு பெரும்பொழுதுகள்
d. நெய்தல் - 4. ஆறு பெரும்பொழுதுகள்
e. பாலை - 5. இளவேனில், முதுவேனில், பின்பனி
A) 5 4 3 2 1 B) 2 3 4 5 1 C) 2 3 5 4 1 D) 1 2 3 4 5 E) விடை தெரியவில்லை

51) ‘தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்’ என்று முழங்கியவர் யார்?
A) அண்ணா B) ம.பொ.சி C) ஆனந்தரங்கர் D) இராமசாமி E) விடை தெரியவில்லை

52) ஜெயகாந்தன் எழுதிய சிறுகதைத் தொகுப்புகளுள் பொருந்தாதது எது?
A) குருபீடம், யுகசந்தி B) ஒருபிடி சோறு, உண்மை சுடும் C) இனிப்பும் கரிப்பும், தேவன் வருவாரா
D) தண்ணீர் தாகம், காதலியின் கையெழுத்து E) விடை தெரியவில்லை

53) பொருத்துக.
a. சேர்க்கை - 1. கட்டி
b. யாக்கை - 2. பயனுள்ள
c. பிணித்து - 3. படுக்கை
d. வாய்ந்த - 4. உடல்
A) 3 4 1 2 B) 4 3 2 1 C) 1 2 3 4 D) 3 2 1 4 E) விடை தெரியவில்லை

54) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்?
A) உதியன், சேரலாதன் B) அதியன், பெருஞ்சாத்தன் C) பேகன், கிள்ளிவளவன்
D) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி E) விடை தெரியவில்லை

55) ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு பற்றிய ‘சிந்தா மணியாம் சிலப்பதிகாரம் படைத்தான்’ எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல் எது?
A) மணிமேகலை B) திருவருட்பா C) குறவஞ்சி D) திருத்தணிகையுலா
E) விடை தெரியவில்லை

56) தேம்பாவணியில் எத்தனை காண்டம் மற்றும் படலம் உள்ளது?
A) 4, 36 B) 5, 35 C) 6, 36 D) 3, 36 E) விடை தெரியவில்லை

57) “நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்” என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?
A) தேம்பாவணி B) தொன்னூல் வளக்கம் C) சதுரகராதி D) பரமார்த்தகுரு கதை
E) விடை தெரியவில்லை

58) கமலாலயன் அவர்களின் இயற்பெயர்
A) கமலாதேவி B) வே.குணசேகரன் C) லேலு D) மாணிக்கம் E) விடை தெரியவில்லை

59) பொருத்துக.
a. முனிவு - 1. உறவினர்
b. அகத்து உவகை - 2. கடம்பவனம்
c. தமர் - 3. மனமகிழ்ச்சி
d. நீபவனம் - 4. சினம்
A) 3 4 1 2 B) 4 3 1 2 C) 3 4 2 1 D) 1 2 3 4 E) விடை தெரியவில்லை

60) "பாண்டியன் என்னை இகழவில்லை சொல்லின் வடிவாக உன் இடதுபுறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறியவர்?
A) இடைக்காடனார் B) கபிலர் C) நக்கீரர் D) குசேல பாண்டியன் E) விடை தெரியவில்லை

61) "இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும்" என்ற புறநானூற்றுப் பாடலில் ஏணிச்சேரி முடமோசியார் எவ்வள்ளலைப் போற்றியுள்ளார்?
A) ஓரி B) ஆய் C) நள்ளி D) காரி E) விடை தெரியவில்லை

62) "சாளரத்தின் கதவுகள், சட்டம் காற்றுடைக்கும்" எனத் தொடங்கும் பாடலின் ஆசிரியர்?
A) பாவாணர் B) தி.சொ.வேணுகோபாலன் C) கவிமணி D) முடியரசன்
E) விடை தெரியவில்லை

63) 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்ற பாடல்வரி இடம்பெற்ற நூல் எது?
A) நற்றிணை B) புறநானூறு C) அகநானூறு D) கலித்தொகை E) விடை தெரியவில்லை

64) 'செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே' என்ற புறநானூறு வரியைப் பாடியவர் யார்?
A) மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் B) மோசிக்கீரனார் C) காரியாசான்
D) மாறன் பொறையனார் E) விடை தெரியவில்லை

65) பொருத்துக.
a. ஓசுநர் - 1. சிற்பி
b. மண்ணுள் வினைஞர் - 2. எண்ணெய் விற்போர்
c. மண்ணீட்டாளர் - 3. ஓவியர்
d. கிழி - 4. துணி
A) 1 2 3 4 B) 3 4 1 2 C) 4 3 2 1 D) 2 3 1 4 E) விடை தெரியவில்லை

66) 'மாசற விசித்த வார்புறு வள்பின்' என்ற புறநானூற்றுப் பாடலைப் பாடியவர்?
A) நக்கண்ணனார் B) மோசிகீரனார் C) பெருங்கௌசிகனார் D) இளங்கோவடிகள்
E) விடை தெரியவில்லை

67) "மெய்யிற் பொடியும் விரிந்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக்கோன்" என்ற சிலப்பதிகாரப் பாடலில் பயின்று வந்துள்ள அணி யாது?
A) தன்மை நவிற்சியணி B) நிரல்நிறை அணி C) உவமையணி D) வேற்றுமை அணி
E) விடை தெரியவில்லை

68) 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன்
குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' இதில் மாவலன் குன்றம், வேலவன் குன்றம் குறிப்பவை முறையே?
A) திருப்பதியும் திருத்தணியும் B) திருத்தணியும் திருப்பதியும் C) திருப்பதியும் திருச்செந்தூரும்
D) திருப்பரங்குன்றமும் பழனியும் E) விடை தெரியவில்லை

69) சிலப்பதிகாரத்தில் உள்ள காண்டங்களில் பொருந்தாதது?
A) மதுரைக்காண்டம் B) வஞ்சிக்காண்டம் C) புகார்க்காண்டம் D) பால காண்டம்
E) விடை தெரியவில்லை

70) ராஜம் கிருஷ்ணன் ............ என்ற புதினத்திற்காக சாகித்ய அகாடமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர் ஆவார்.

A) வேருக்கு நீர் B) அவனும் அவளும் C) அல்லும் பகலும் D) வெளிச்சம் பகல்
E) விடை தெரியவில்லை

71) பொருத்துக.

a. சேந்தன - 1. வில்
b. தெவ் - 2. மேலே
c. சிலை - 3. சிவந்தன
d. மிசை - 4. பறவை
e. புள் - 5. பகைமை

A) 3 4 5 2 1 B) 1 2 3 4 5 C) 3 5 1 2 4 D) 5 4 3 2 1 E) விடை தெரியவில்லை

72) இலக்கணக்குறிப்பு தருக : "கேள்வியினான்"
A) வினைத்தொகை B) பண்புத்தொகை C) வினையாலணையும் பெயர் D) பெயரெச்சம்
E) விடை தெரியவில்லை

73) "தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க
கொண்டல்கண் முழவினேங்க குவளைகள் விழித்து நோக்க" என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?
A) சிலப்பதிகாரம் B) கம்பராமாயணம் C) மணிமேகலை D) சீவகசிந்தாமணி
E) விடை தெரியவில்லை

74) பொருத்துக.

a. சூரிய வம்சம் - 1. ந.முத்துசாமி
b. நாற்காலிக்காரர் - 2. மு.வரதராசனார்
c. கலங்காதிரு மனமே - 3. முத்தையா
d. அறமும் அரசியலும் - 4. சா.கந்தசாமி

A) 4 1 3 2 B) 4 3 1 2 C) 2 1 3 4 D) 3 1 2 4 E) விடை தெரியவில்லை

75) தவறான இணையைத் தேர்ந்தெடு.
A) காஞ்சித் திணை - எதிர்த்துப் போரிடல் B) உழிஞைத் திணை - கோட்டையை சுற்றி வளைத்தல்
C) நொச்சித் திணை- ஆநிரை கவர்தல் D) கரந்தைத் திணை - ஆநிரை மீட்டல்
E) விடை தெரியவில்லை

76) உனக்குக் கதை எழுதத் தெரியுமா? என்ற வினாவிற்கு 'கட்டுரை எழுதத் தெரியும்' என்று கூறுவது எவ்வகை விடை ஆகும்?
A) சுட்டு விடை B) மறை விடை C) நேர் விடை D) இனமொழி விடை
E) விடை தெரியவில்லை

77) "அறைக்குள் யாழிசை ஏதென்று சென்று எட்டிப்பார்த்தேன், பேத்தி, நெட்டுருப் பண்ணினாள் நீதிநூல் திரட்டையே" என்ற கவிதை யாருடையது?
A) பாரதிதாசன் B) பாரதியார் C) வாணிதாசன் D) முடியரசன் E) விடை தெரியவில்லை

78) செய்குத்தம்பி பாவலர் எந்த ஆண்டு சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செய்யுள்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி 'சதாவதானி' என்ற பாராட்டைப் பெற்றார்?
A) மார்ச் 10, 1907 B) ஜனவரி 10, 1910 C) மார்ச் 20, 1908 D) ஜனவரி 20, 1907
E) விடை தெரியவில்லை

79) 'தகதக தகதகக தந்தத்த தந்தகக
என்று தாளம்
பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக' என்ற பாடல்வரியைப் பாடியவர்?
A) அருணகிரிநாதர் B) சேக்கிழார் C) இளங்கோவடிகள் D) கம்பர் E) விடை தெரியவில்லை

80) "நுண்ணிய கேள்வி யோறும் மன்னநீ நுவன்ற சொல்லலாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா" என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்?
A) திருவிளையாடற்புராணம் B) கல்லாடம் C) சிலப்பதிகாரம் D) பெரியபுராணம்
E) விடை தெரியவில்லை

81) ஐக்கிய இந்திய தேசிய கழகத்தை உருவாக்கியவர் யார்?
A) சர் சையது அகமதுகான் B) ஹாரிஸ் முகர்ஜி C) ஆகாகான் D) எம்.ஜி.ராணடே
E) விடை தெரியவில்லை

82) எந்த தொழிற்கொள்கை தீர்மானத்தில் சமதர்ம மாதிரி சமுதாயத்தை ஏற்படுத்துதல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது?
A) 1948ஆம் ஆண்டு தொழிற்கொள்கை தீர்மானம் B) 1956ஆம் ஆண்டு தொழிற்கொள்கை தீர்மானம்
C) 1985ஆம் ஆண்டு தொழிற்கொள்கை தீர்மானம் D) 1991ஆம் ஆண்டு தொழிற்கொள்கை தீர்மானம்
E) விடை தெரியவில்லை

83) விவசாய பயிர் காப்பீடு முறையை இந்திய அரசாங்கம் கொண்டுவந்த ஆண்டு எது?
A) 1986 B) 1984 C) 1985 D) 1989 E) விடை தெரியவில்லை

84) கூற்று : நவீன வாணிபத்தின் முதுகெலும்பாக வங்கித்துறை செயல்படுகிறது.
காரணம் : வணிக வங்கிகள் கேட்பு வைப்புகளின் அளவை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடியும்.
A) கூற்று (ம) காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.
B) கூற்று (ம) காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.
C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி E) விடை தெரியவில்லை

85) ஈ.வெ.இராமசாமி பற்றிய தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
1. இவர் 1919ஆம் ஆண்டு காங்கிரஸில் இணைந்தார்.
2. இவர் 1924ஆம் ஆண்டு சென்னை மாநில காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. இவர் 1923ம் ஆண்டு வைக்கம் சத்தியாகிரகத்தை வழிநடத்தினார்.
A) 1 மட்டும் B) 2 (ம) 3 C) 1 (ம) 2 D) 3 மட்டும் E) விடை தெரியவில்லை

86) இராஜாஜி எங்கு "காந்தி ஆசிரமம்" அமைத்து மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தார்?
A) திருநெல்வேலி B) திருச்சிராப்பள்ளி C) திருச்செங்கோடு D) திருவண்ணாமலை
E) விடை தெரியவில்லை

87) 1917-1921 வரை ராஜாஜி அவர்கள் வகித்த பதவி ................
A) நகரசபைத் தலைவர் B) அரசு வழக்கறிஞர் C) முதலமைச்சர்
D) இந்திய தேசிய காங்கிரசின் தலைவர் E) விடை தெரியவில்லை

88) கீன்சின் வட்டிக் கோட்பாடு அழைக்கப்படுவது
A) துய்ப்பு தவிர்ப்பு கோட்பாடு B) நீர்மை விருப்பக் கோட்பாடு C) கடன்நிதிக் கோட்பாடு
D) ஏஜியோ கோட்பாடு E) விடை தெரியவில்லை

89) சுதேசி தர்ம சங்க நெசவாளிகள் சங்கத்தைத் தோற்றுவித்தவர் யார்?
A) சுப்ரமணிய ஐயர் B) சுப்ரமணிய சிவா C) A&B D) வ.உ.சி E) விடை தெரியவில்லை

90) சரியான விடையைத் தேர்ந்தெடு.
கூற்று : நீதிக்கட்சி தன்னாட்சி இயக்கத்தை எதிர்த்தது.
காரணம் : தன்னாட்சி இயக்கம் பிராமணர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கிவிடுமென நீதிக்கட்சி அஞ்சியது.
A) கூற்று (ம) காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.
B) கூற்று (ம) காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.
C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி E) விடை தெரியவில்லை

91) பின்வருவனவற்றைக் காலவரிசைப்படுத்துக.
1. திராவிடர் கழகத்தின் தோற்றம்.
2. தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.
3. திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.
4. மாநிலத் தன்னாட்சித் தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.
A) 1 2 4 3 B) 1 2 3 4 C) 4 1 3 2 D) 3 1 2 4 E) விடை தெரியவில்லை

92) யாருடைய ஆட்சிக் காலத்தில் ஏ.என்.சட்டநாதன் தலைமையிலான பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டது?
A) ஓ.பி.ராமசாமி ரெட்டியார் B) பேரறிஞர் அண்ணா C) மு.கருணாநிதி D) எம்.ஜி.ராமச்சந்திரன்

E) விடை தெரியவில்லை

93) பின்வரும் தலைவர்களில் வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்றவர்கள் யாவர்?

1. T.S.S.ராஜன் 2. ருக்மணி லட்சுமிபதி 3. சர்தார் வேதரத்தினம்
4. C. சாமிநாதர் 5. வைத்தியநாதர் 6. K. சந்தானம்

A) 2, 3, 4 (ம) 6 B) 1, 2, 3, 5 (ம) 6 C) 1, 2, 3, 4 (ம) 6 D) அனைத்தும்
E) விடை தெரியவில்லை

94) சுதந்திரத்திற்கு முன்பு தமிழகத்தில் எப்பொழுது இந்தி பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கப்பட்டது?

A) 1936 B) 1937 C) 1938 D) 1939 E) விடை தெரியவில்லை

95) அனைத்து ஏழைகளுக்குமான வீட்டு வசதி, குடிசை மாற்றம் வாரியம் உருவாக்கம் மற்றும் படிஅரிசி, ஒரு ரூபாய் திட்டம் ஆகியவை ........................ ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.

A) காமராசர் B) அண்ணா C) மு.கருணாநிதி D) எம்.ஜி.ராமச்சந்திரன் E) விடை தெரியவில்லை

96) பெரியார் ................. அவரின் புகழ்பெற்ற வாசகமான “திராவிட நாடு திராவிடர்களுக்கே” என்பதை முழங்கினார்.

A) ஈரோடு சேலத்தில் B) சேலம் மாநாட்டில் C) சென்னை அகில இந்திய பெண்கள் மாநாட்டில்
D) எழும்பூர் அணியில் E) விடை தெரியவில்லை

97) கீழ்காண்பவர்களுள் சென்னை மாகாணத்தில் தொழிலாளர் சங்கங்களை அமைப்பதில் ஈடுபட்டவர்கள் யாவர்?

1. பெரியார் 2. பி.பி.வாடியா 3. எம்.சி.ராஜா 4. ம.சிங்காரவேலர் 5. திரு.வி.கல்யாணசுந்தரம்

A) 1, 2, 4 (ம) 5 B) 1, 2 (ம) 5 C) 2, 3 (ம) 4 D) 2, 4 (ம) 5 E) விடை தெரியவில்லை

98) சத்தியமூர்த்தி குறித்து சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு.

1. மெட்ராஸ் இசை அகாடமி அமைத்ததில் சத்தியமூர்த்தி முக்கிய பங்கு வகித்தார்.
2. இவர் 1942ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டார்.

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 (ம) 2 D) எதுவுமில்லை E) விடை தெரியவில்லை

99) தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதி என்று அழைக்கப்பட்டவர் யார்?

A) கே.பி.ஜானகி B) ப.ஜீவானந்தம் C) சிங்காரவேலர் D) நல்லகண்ணு E) விடை தெரியவில்லை

100) நான் கண்ட பாரதம் எனும் நூலை எழுதியவர்

A) தர்மாம்பாள் B) அஞ்சலையம்மாள் C) அம்புஜத்தம்மாள் D) மூவலூர் இராமாமிர்தம்
E) விடை தெரியவில்லை

101) பசுமைப் புரட்சி தொடர்பான சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. 1960ல் அதிக மகசூல் தரும் உயர் ரக வீரிய கோதுமை, நெல் விதைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
2. இம்முறையில் ரசாயன உரங்கள், பூச்சி மருந்துகளின் தேவை பெருமளவு அதிகரித்தது.
3. இருபது ஆண்டுகளில் இந்தியா உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது.

A) 1, 2 (ம) 3 B) 1 (ம) 2 C) 2 (ம) 3 D) அனைத்தும் E) விடை தெரியவில்லை

102) கீழ்கண்டவற்றுள் எவை பரந்தநிலை பணம் என்றழைக்கப்படுகின்றன?

A) $M_3$ (ம) $M_4$ B) $M_1$ (ம) $M_2$ C) $M_2$ (ம) $M_4$ D) $M_1$ (ம) $M_3$ E) விடை தெரியவில்லை

103) பணவீக்கத்தின் போது இழப்பை சந்திப்பவர்கள் யார்?

1. கடன் பெற்றோர் 2. கடன் வழங்கியோர் 3. நிலையான வருவாய் பிரிவினர் 4. முதலீட்டாளர்கள்

A) 1, 2 (ம) 3 B) 1 (ம) 4 C) 2, 3 (ம) 4 D) 2 (ம) 3 E) விடை தெரியவில்லை

104) திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத கனரக மின்சாதன நிறுவனம் (BHEL) எதை தயாரிக்கிறது?

A) இணைப்பு இரயில் பெட்டிகள் B) வாகனங்களின் உதிரி பாகங்கள் C) கொதிகலன் (ம) விசையாழிகள்
D) மின்சார பாகங்கள் E) விடை தெரியவில்லை

105) கீழ்கண்டவற்றுள் எந்த வருடம் இந்தியா எதிர்மறை மக்கள்தொகை வளர்ச்சியை பதிவு செய்துள்ளது?

A) 1921 B) 1931 C) 1956 D) 1991 E) விடை தெரியவில்லை

106) இந்தியாவில் முழுமையான மற்றும் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட ஆண்டு எது?

A) 1872 B) 1881 C) 2021 D) 1991 E) விடை தெரியவில்லை

107) கீழ்கண்டவற்றுள் எது வணிக வங்கிகளில் இருக்கும் மொத்த கேட்பு மற்றும் கால வைப்புகளில் நீர்மை தன்மையிலான சொத்துகளின் விகிதம்?

A) ரொக்க வைப்பு விகிதம் B) ரொக்க இருப்பு விகிதம் C) சட்டபூர்வ நீர்மை விகிதம்
D) ரொக்க இருப்பு வைப்பு விகிதம் E) விடை தெரியவில்லை

திண்ணை

108) “ஸ்டாண்ட் அப் இந்தியா” திட்டம் எதனுடன் தொடர்புடையது?
  A) பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினத்தை சார்ந்த தொழில் முனைவோருடன்.
  B) மாற்று திறனாளிகளுடன்
  C) சுய உதவிக் குழுக்களுடன்
  D) கூட்டுறவுச் சங்கங்களுடன்
  E) விடை தெரியவில்லை

109) விவசாயப் பொருட்களுக்கான அங்காடிக் குழு (APMC) என்பது வேளாண்மை அல்லது தோட்டக்கலை அல்லது கால்நடைப் பொருட்களை வர்த்தகம் செய்வதற்கான ஒரு ............ அமைப்பு, .......... அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டது.
  A) சட்டபூர்வ, மாநில  B) சட்டபூர்வ, மத்திய  C) ஆலோசனை, மாநில  D) ஆலோசனை, மத்திய
  E) விடை தெரியவில்லை

110) கீழ்கண்டவற்றுள் $M_2$ என அழைக்கப்படுவது எது?
  A) காகிதப்பணம், நாணயங்கள் மற்றும் கேட்பு வைப்புகள்.
  B) $M_1$ + அஞ்சலகத்திலுள்ள அனைத்து வைப்புகள்.
  C) $M_1$ + அனைத்து வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளிலுள்ள கால வைப்புகள்.
  D) $M_1$ + அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்.
  E) விடை தெரியவில்லை

111) தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்ட ஆண்டு .............
  A) 2013  B) 1987  C) 2016  D) 1995  E) விடை தெரியவில்லை

112) கீழ்கண்டவற்றள் பல பரிமாண வறுமை குறியீடுக்கு அளவுகோல்களாக பயன்படுவது எது?
  1. சுகாதாரம்  2. கல்வி  3. வாழ்க்கைத்தரம்
  A) 1 (ம) 2  B) 2 (ம) 3  C) 1 (ம) 3  D) அனைத்தும்  E) விடை தெரியவில்லை

113) பின்வருவனவற்றுள் எது பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் பணவியல் முறைகள் அல்ல?
  A) வெளிச்சந்தையில் அரசு பத்திரங்களை விற்றல்.
  B) அரசு செலவினங்களை குறைத்தல்.
  C) மீள் வாங்கல் விகிதம் மற்றும் திருப்ப மீள் வாங்கல் விகிதம் ஆகியவற்றை உயர்த்துதல்.
  D) நுகர்வோர் கடனை கட்டுப்படுத்துதல்.
  E) விடை தெரியவில்லை

114) 1991ஆம் அண்டு எந்த குழுவின் பரிந்துரைப்படி, சட்டரீதியான நீர்மை விகிதம் (SLR) மற்றும் ரொக்க இருப்பு விகிதம் (CRR) குறைக்கப்பட்டது?
  A) ராஜா செல்லையா குழு  B) நரசிம்மம் குழு  C) பகவதி குழு  D) காட்கில் குழு
  E) விடை தெரியவில்லை

115) கீழ்கண்டவற்றுள் பூமிதான இயக்கத்துடன் தொடர்புடைய கொள்கை எது?
  A) நில உச்சவரம்பு  B) நிலம் வைத்திருத்தல்  C) குத்தகை முறை  D) நிலம் ஒருங்கிணைத்தல்
  E) விடை தெரியவில்லை

116) பொருத்துக.
  a. காங்கிரஸ் திட்டம் - 1. 1934
  b. விஸ்வேஸ்வரய்யா திட்டம் - 2. 1938
  c. பாம்பே திட்டம் - 3. 1944
  d. சர்வோதயா திட்டம் - 4. 1950
  A) 2 4 1 3  B) 2 1 3 4  C) 3 1 4 2  D) 1 2 3 4  E) விடை தெரியவில்லை

117) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP) 1980 - 89 பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
  1. கிராமப்புற குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவது.
  2. நாட்டின் 4011 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
  3. 1990ல் இத்திட்டம் கிராமப்புற ஏழைகளின் சுய வேலைவாய்ப்பை மேம்படுத்த மறுசீரமைக்கப்பட்டது.
  A) 1 (ம) 2  B) 2 (ம) 3  C) 1 மட்டும்  D) 3 மட்டும்  E) விடை தெரியவில்லை

திண்ணை

118) பின்வருவனவற்றில் பணவியல் கொள்கையின் நோக்கம் எது/எவை?

1. விலை நிலைத்தன்மை 2. பொருளாதார வளர்ச்சி 3. சமூக நீதி

4. அரசு வரவு-செலவு திட்டத்தின் பற்றாக்குறையை குறைப்பது

A) 1 (ம) 3 B) 2 (ம) 3 C) 1, 2 (ம) 3 D) அனைத்தும் E) விடை தெரியவில்லை

119) கூற்று : வாங்கும் சக்தி அதிகரிப்பதில், விலை குறைகிறது மற்றும் இரு நேர்மாறானது.

காரணம் : பொருட்களின் உற்பத்தி குறைந்து, விலை அதிகரிப்பதால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

A) கூற்று (ம) காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.

B) கூற்று (ம) காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

E) விடை தெரியவில்லை

120) டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. 1940ல் ஹோமி J. பாபாவால் நிறுவப்பட்டது.

2. கணிதம் மற்றும் அறிவியல் துறைகளில் ஆய்வுகளை ஊக்குவிப்பதற்காக அமைக்கப்பட்டது.

3. மத்திய அரசால் நிதி வழங்கப்படுகிறது.

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 (ம) 2 D) எதுவுமில்லை E) விடை தெரியவில்லை

121) கீழ்கண்டவற்றுள் எவை பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்கள் அல்ல?

1. நாட்டிலிருந்து கருப்புப் பணத்தினை ஒழிப்பது 2. இலஞ்சத்தை தடுப்பது

3. தீவிரவாதத்திற்கு பணம் செல்வதை தடுப்பது 4. கள்ள பணத்தினை தடுப்பது

A) 1 (ம) 3 B) 2 (ம) 4 C) அனைத்தும் D) எதுவுமில்லை E) விடை தெரியவில்லை

122) சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு பின், வேளாண்மைத் துறை வளர்ச்சி விகிதத்தில் கூர்மையான சரிவைக் காட்டியது.

2. ஆனால் இந்திய பொருளாதாரம், தொழில்துறை மற்றும் சேவைத்துறைகளில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது.

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 (ம) 2 D) எதுவுமில்லை E) விடை தெரியவில்லை

123) பொருத்துக.

| எஃகு ஆலை | | மாநிலம் |
|---|---|---|
| a. பிலாய் | - | 1. சத்தீஸ்கர் |
| b. துர்காபூர் | - | 2. மேற்கு வங்காளம் |
| c. ரூர்கேலா | - | 3. ஒடிசா |
| d. பொக்காரோ | - | 4. ஜார்கண்ட் |

A) 1 2 3 4 B) 3 4 2 1 C) 4 2 3 1 D) 2 1 4 3 E) விடை தெரியவில்லை

124) மொத்த உள்நாட்டு தயாரிப்பு குறித்த தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) இது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பு.

B) இடைநிலைப் பொருட்கள் சேர்க்கப்பட்டால் இருமுறை கணக்கிடுதல் ஏற்படுகிறது.

C) இது ஒரு குறிப்பிட்ட காலத்தில் புவியியல் எல்லைக்குள் தயாரிக்கப்படுகிறது.

D) மக்கள்தொகை வரம்பில் வருமானத்தின் சமமான விநியோகம் உள்ளது.

E) விடை தெரியவில்லை

125) பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டம் எது?

A) ஆறாவது திட்டம் B) ஏழாவது திட்டம் C) எட்டாவது திட்டம் D) ஒன்பதாவது திட்டம்

E) விடை தெரியவில்லை

126) தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

1. கடந்த பத்தாண்டுகளில் உழைக்கும் மக்கள்தொகை 60 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

2. கடந்த இரண்டு பத்தாண்டுகளில் தனிநபர் வருமானம் அதிகரித்து, முழுமையான வறுமையை குறைத்து வருகிறது.

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 (ம) 2 D) எதுவுமில்லை E) விடை தெரியவில்லை

திண்ணை

127) GVA கணக்கீடு பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

A) GVA = GDP + மானியம் – வரிகள் (மறைமுக வரி, விற்பனை வரி)

B) GVA = GDP + மானியம் – வரிகள் (நேர்முக வரி, விற்பனை வரி)

C) GDP = GVA + மானியம் – வரிகள் (நேர்முக வரி, விற்பனை வரி)

D) GDP = GVA + மானியம் – வரிகள் (மறைமுக வரி, விற்பனை வரி)

E) விடை தெரியவில்லை

128) பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்காக இந்திய அரசு வகுத்த வர்த்தக கொள்கைகள் யாவை?

1. இறக்குமதி (ம) ஏற்றுமதி கொள்கை 2. நாணய (ம) வங்கி கொள்கை 3. வேலைவாய்ப்பு கொள்கை

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 (ம) 2 D) அனைத்தும் E) விடை தெரியவில்லை

129) பின்வருவனவற்றில் அஞ்சல் துறையால் வழங்கப்படும் சேவைகள் எவை?

1. பண அஞ்சல் 2. துரித சேவை 3. செயற்கைக்கோள் வழி அஞ்சல்
4. விரைவான கடவுச்சீட்டு சேவை 5. ஊடக அஞ்சல்

A) 1, 3 (ம) 5 B) 1, 2 (ம) 3 C) 1, 2, 3 (ம) 5 D) அனைத்தும் E) விடை தெரியவில்லை

130) தமிழ்நாட்டில் உள்ள மருத்துவ கல்லூரிகளில் மருத்துவப் படிப்பிற்காக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் உள்இட ஒதுகீடு அளவு எவ்வளவு?

A) 8.5% B) 6.5% C) 8% D) 7.5% E) விடை தெரியவில்லை

131) பின்வருவனவற்றில் பன்னாட்டு நிறுவனம் வளர்ச்சிக்கான காரணங்கள் யாவை?

1. சந்தைப்படுத்தல் மேன்மை 2. பண்டங்களின் கண்டுபிடிப்புகள் 3. சந்தை பிரதேசத்தின் குறைப்பு

A) 1 (ம) 2 B) 2 (ம) 3 C) 1 (ம) 3 D) மேற்கண்ட அனைத்தும் E) விடை தெரியவில்லை

132) சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் 1999 இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்துவதாகும்.

2. அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் 1974 கட்டுப்பாட்டுக்கு மாறாக நிர்வாகத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

3. வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டம் 2010 வெளிநாட்டு பங்களிப்பை ஒழுங்குபடுத்துவதாகும்.

A) 1 (ம) 2 B) 2 மட்டும் C) 3 மட்டும் D) 1 (ம) 3 E) விடை தெரியவில்லை

133) 1954ல் ஜிஎஸ்டி ஐ முதலில் நடைமுறைப்படுத்திய நாடு எது?

A) ஜெர்மனி B) பிரான்ஸ் C) இத்தாலி D) அமெரிக்கா E) விடை தெரியவில்லை

134) எந்த அமைப்பு பின்வரும் நோக்கங்களைக் கொண்டு உள்ளன?

1. நிலையான முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து அறிமுகம் செய்தல்.

2. முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்.

3. முழு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள தேவையை அதிகரித்தல்.

A) UNTCAD B) WTO C) IMF D) உலக வங்கி E) விடை தெரியவில்லை

135) ஸ்டார்ட் அப் இந்தியா திட்டத்தைப் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. இந்த திட்டம் இந்திய அரசால் ஏப்ரல் 5, 2016ல் தொடங்கப்பட்டது.

2. வங்கிக் கடன் குறைந்தபட்சம் 10 லட்சம் முதல் அதிகபட்சம் 1 கோடி வரை பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் பெண் கடன் பெறுவோர்.

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 (ம) 2 D) எதுவுமில்லை E) விடை தெரியவில்லை

136) பின்வருவனவற்றில் உலக வர்த்தக அமைப்பால் குறிப்பிடப்பட்ட மானியங்களின் வகைகள் எவை?

1. வரி சலுகைகள் அளித்தல் 2. கடன் உத்தரவாதங்கள் 3. பண மானியங்கள்

A) 1 (ம) 2 B) 2 (ம) 3 C) 1 (ம) 3 D) அனைத்தும் E) விடை தெரியவில்லை

137) பொருத்துக.

| திட்டம் | ஆண்டு |
|---|---|
| a. அம்மா உணவகம் | - 1. 2015 |
| b. அம்மா சிமெண்ட் | - 2. 2016 |
| c. அம்மா குழந்தை பராமரிப்பு பெட்டி | - 3. 2014 |
| d. அம்மா அழைப்பு மையம் | - 4. 2013 |

A) 3 2 1 4 B) 2 3 4 1 C) 1 4 3 2 D) 4 3 1 2 E) விடை தெரியவில்லை

திண்ணை பயிற்சிப் பட்டறை, 57A, ஜவகர் மெயின்ரோடு, N.R.T. நகர்,தேனி. 99409 70325 Thinnai competitive Exam YouTube Thinnai Theni

138) எந்த வரியின் சுமையை மற்றவர்களுக்கு மாற்ற முடியாது?

A) நேர்முக வரி B) மறைமுக வரி C) 1 (ம) 2 D) எதுவுமில்லை E) விடை தெரியவில்லை

139) தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

1. வளர்வீதவரி விதிப்பு முறை - ஒரு நிலையான அளவில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் வரி.

2. விகிதவரி விதிப்பு முறை - வரியின் அடிப்படைத் தளம் அதிகரிக்கும் போது வரி விகிதமும் அதிகரிக்கிறது.

3. தேய்வு வீதவரி விதிப்பு முறை - இது வளர்வீத வரி விதிப்பு முறைக்கு நேர் எதிர் மாறானதாகும்.

A) 1 (ம) 2 B) 2 மட்டும் C) 3 மட்டும் D) 1 (ம) 3 E) விடை தெரியவில்லை

140) பின்வருவனவற்றில் வரி ஏய்ப்புக்கு வழி வகுப்பது எது?

1. வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல்
2. விலக்குகள் அல்லது செலவுகளை உயர்த்துவது
3. மறைக்கப்பட்ட பணம்
4. கடல் கடந்த கணக்குகளில் விவரங்களை மறைத்தல்

A) 1, 2 (ம) 3 B) 2, 3 (ம) 4 C) 1, 3 (ம) 4 D) அனைத்தும் E) விடை தெரியவில்லை

141) இரு எண்களின் விகிதம் 15:11. அவற்றின் மீ.பொ.வ 13 எனில் அந்த எண்கள் யாவை?

A) 188, 192 B) 151, 163 C) 195, 143 D) 172, 187 E) விடை தெரியவில்லை

142) 10 ஆட்டங்களில் ஒரு கிரிக்கெட் வீரர் எடுத்த ஓட்டங்கள் 54, 26, 8, 112, 184, 44, 31, 2, 79, 16. அடுத்த ஆட்டம் முடிவில் அவரது சராசரி ஓட்டம் 53 ஆக இருக்க வேண்டுமெனில் அவர் அடுத்த ஆட்டத்தில் எத்தனை ஓட்டங்கள் எடுக்க வேண்டும்?

A) 37 B) 31 C) 27 D) 22 E) விடை தெரியவில்லை

143) ஒரு பொருளின் விலை 20%, 10% என இருமுறை அடுத்தடுத்து குறைக்கப்படுகிறது எனில் குறைப்பு சதவீதம் என்ன?

A) 22% B) 28% C) 32% D) 38% E) விடை தெரியவில்லை

144) ஒரு கிராமத்தில் ஆண் மற்றும் பெண் 31:23 என்ற விகிதத்தில் உள்ளனர். மேலும் 75 பெண்கள் சேர்க்கப்பட்டால் 124:107 என மாறும். மேலும் எத்தனை பெண்கள் சேர்க்கப்பட்டால் பாலின சமநிலை ஏற்படும்?

A) 45 B) 65 C) 95 D) 85 E) விடை தெரியவில்லை

145) 2 ஆண்டுகளில் ரூ.11,000 ஆனது ரூ.12,650 ஆகிறது எனில் ரூ.19,000 க்கு அதே வட்டி வீதத்தில் 4 ஆண்டுகளில் கிடைக்கும் தனிவட்டி என்ன?

A) ரூ.5,650 B) ரூ.5,750 C) ரூ.5,800 D) ரூ.5700 E) விடை தெரியவில்லை

146) ரூ.1200க்கு 10% வட்டிவீதத்தில் அரையாண்டுக்கு ஒருமுறை வட்டி அசலுடன் சேர்க்கப்பட்டால் கிடைக்கும் தனிவட்டி மற்றம் கூட்டுவட்டிக்கு இடையிலான ஓராண்டு வேறுபாடு என்ன?

A) ரூ.2.50 B) ரூ.3 C) ரூ.3.75 D) ரூ.4 E) விடை தெரியவில்லை

147) ஆல்பர்ட் என்பவர் ஒரு பழைய ஸ்கூட்டரை ரூ.4700க்கு வாங்கி ரூ.800 செலவழித்த பழுது பார்க்கிறார். அதனை ரூ.5800க்கு விற்றால் அவருக்கு கிடைக்கும் இலாப சதவீதம் என்ன?

A) 4.57% B) 5.45% C) 10% D) 12% E) விடை தெரியவில்லை

148) ராம் மற்றும் சிவா ஒரு வேலையை 8 நாட்களில் முடிப்பர். ராம் தனியாக அதே வேலையை 12 நாட்களில் முடித்தால் சிவா தனியாக எவ்வளவு நாட்களில் முடிக்க முடியும்?

A) 26 நாட்கள் B) 19 நாட்கள் C) 20 நாட்கள் D) 24 நாட்கள் E) விடை தெரியவில்லை

149) ஒரு செவ்வக வடிவ தோட்டத்தின் நீளம் மற்றும் அகலம் முறையே 4:3. அதன் பரப்பளவு 7500மீ$^2$ தோட்டத்தைச் சுற்றி முள்வேலி அமைக்க மீட்டருக்கு ரூ.30 வீதம் எவ்வளவு செலவு ஆகும்?

A) ரூ.10,500 B) ரூ.13,000 C) ரூ.12,500 D) ரூ.14,400 E) விடை தெரியவில்லை

150) 3செ.மீ, 4செ.மீ, 5செ.மீ பக்க அளவுடைய மூன்று கனசதுரங்கள் உருக்கப்பட்டு ஒரு பெரிய கன சதுரமாக மாற்றப்படுகிறது. சிறிய கனசதுரங்களின் மொத்தபுறப்பரப்பிற்கும், பெரிய கன சதுரத்தின் மொத்த புறப்பரப்பிற்கும் உள்ள விகிதம் என்ன?

A) 2:1 B) 3:2 C) 25:18 D) 27:20 E) விடை தெரியவில்லை

## 19th Batch - Test 25 - Answer Key

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| **A** | **B** | **C** | **A** | **C** | **C** | **B** | **C** | **D** | **B** | **D** | **C** | **D** | **C** | **B** |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **A** | **C** | **A** | **D** | **C** | **D** | **B** | **A** | **B** | **C** | **A** | **B** | **D** | **B** | **D** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 | 43 | 44 | 45 |
| **A** | **A** | **A** | **A** | **A** | **A** | **C** | **B** | **B** | **D** | **B** | **B** | **D** | **A** | **B** |
| 46 | 47 | 48 | 49 | 50 | 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **A** | **A** | **B** | **A** | **D** | **B** | **D** | **A** | **B** | **D** | **D** | **A** | **B** | **B** | **A** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 | 71 | 72 | 73 | 74 | 75 |
| **B** | **B** | **B** | **A** | **D** | **B** | **A** | **A** | **D** | **A** | **C** | **C** | **B** | **A** | **C** |
| 76 | 77 | 78 | 79 | 80 | 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| **D** | **A** | **A** | **A** | **A** | **A** | **B** | **C** | **B** | **B** | **C** | **A** | **B** | **D** | **A** |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 | 101 | 102 | 103 | 104 | 105 |
| **B** | **C** | **C** | **C** | **B** | **B** | **D** | **C** | **C** | **C** | **C** | **A** | **C** | **C** | **A** |
| 106 | 107 | 108 | 109 | 110 | 111 | 112 | 113 | 114 | 115 | 116 | 117 | 118 | 119 | 120 |
| **B** | **C** | **A** | **A** | **D** | **A** | **D** | **B** | **B** | **A** | **B** | **C** | **C** | **A** | **B** |
| 121 | 122 | 123 | 124 | 125 | 126 | 127 | 128 | 129 | 130 | 131 | 132 | 133 | 134 | 135 |
| **D** | **C** | **A** | **D** | **C** | **D** | **A** | **A** | **D** | **D** | **A** | **C** | **B** | **B** | **D** |
| 136 | 137 | 138 | 139 | 140 | 141 | 142 | 143 | 144 | 145 | 146 | 147 | 148 | 149 | 150 |
| **A** | **D** | **A** | **A** | **C** | **C** | **C** | **B** | **D** | **D** | **B** | **B** | **D** | **A** | **C** |